# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029199

1. District : மாவட்டம் புதுக்கோட்டை PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 1/2018 Date: நாள் 12.1.2018

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(d) of PC Act 1988

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 12.1.18 Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 19.00hrs Time to : நேரம் வரை 21.30hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.1.18 Time : நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் புதுக்கோட்டை புதிய Jail சாலையில் திருக்கோகர்ணம் நோக்கி சென்ற வந்த அலுவலக டாடா இண்டிகா TN67 AM 5407 500 mtr. கிழக்கு

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. ப. முருகேசன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் உடையப்பன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி (தனி வட்டாட்சியர் மாநில கேபிள் TV நாட்பரப்பகம்) மற்றும் தீப்பு கூ அலுவலர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திரு. S. மதிசெல்வன் 40/18 S/o சுப்பிரமணியன் மாவட்ட மேலாளர் டாஸ்மாக் புதுக்கோட்டை. 2. திரு. G. ரமேஷ் S/o நெல்லையா கண்காணிப்பாளர் கடை எண் 6695 3. திரு. மணிவண்ணன் S/o செல்லையா சூப்பர்வைசர் கடை எண் 6524 புதுக்கோட்டை

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்பட்டது:</u>

இன்று (12–01–2018)ம் தேதி புதுக்கோட்டை மாவட்ட ஆய்வு குழு அலுவலரும், புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு பார்டியினரும் சேர்ந்து மாலை 07.00 மணி முதல் 21.30 மணி வரை புதுக்கோட்டை டாஸ்மாக் நிறுவன மேலாளர் திரு.மதிசெல்வன் அவர்கள் ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்தி வந்த டி.என் 67 ஏ.எம் 5407 என்ற டாடா இண்டிகா சில்வர் கலர் வாகனத்தை நிறுத்தி திடீர் சோதனை மேற்கொண்டதை தொடர்ந்து 22.30 மணிக்கு ஆய்வு குழு அலுவலர் கொடுத்த புகார் மனு விபரம் பின்வருமாறு :– அனுப்புநர் திரு.முருகேசன், வயது 42/2018, த/பெ உடையப்பன், தனி வட்டாட்சியர், அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன், புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் ஆய்வுக்குழு அலுவலர், புதுக்கோட்டை, பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை, அய்யா, புதுக்கோட்டை மாவட்ட டாஸ்மாக் மேலாளராகப் பணிபுரிந்து வரும் திரு.மதிச்செல்வன் என்பவர் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள டாஸ்மாக்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

12/1/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் [illegible]
Rank: நிலை ...................... No. எண் ..........
Inspr / V&AC
Pudukkottai

கடைகளில் பணிபுரியும் பணியாளர்களிடம் மாமூல் வசூலித்து கொண்டு டி.என் 67 ஏ.எம் 5407 என்ற டாடா இண்டிகா சில்வர் கலர் வாகனத்தில் வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 12.01.2018ஆம் தேதி நானும், திரு.பார்த்திபன், வயது 54/2018 த/பெ ரெத்தினம், அலுவலக மேலாளர் (தனி வட்டாட்சியர்), உதவி ஆணையர் கலால் அலுவலகம், புதுக்கோட்டை மாவட்டம், மற்றும் காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு புதுக்கோட்டை மற்றும் காவல் குழுவினர்களுடன் இணைந்து புதுக்கோட்டை டவுன் ஜெயில் ரோட்டில் வந்து கொண்டிருந்த மேற்படி பதிவெண் கொண்ட வாகனத்தை நிறுத்தி திடீர் சோதனை மேற்கொண்டோம். அதில் மேற்படி டாஸ்மாக் மேலாளர் திரு.மதிசெல்வன், புதுக்கோட்டை டவுன் சாந்தநாதபுரம் கடை எண்.6995ல் சூப்பர்வைசராக பணிபுரியும் திரு.முருகேசன் மற்றும் திருவப்பூர் டாஸ்மாக் கடை எண்.6524ல் சூப்பர்வைசராக பணிபுரியும் திரு.மணிவண்ணன் ஆகியோர் இருந்தனர். பிறகு அவர்களிடம் அறிமுகம் செய்தும், மேற்படி இடம் போக்குரவத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக இருந்த காரணத்தினால் அந்த இடத்தில் சோதனை மேற்கொள்ளவும், நடவடிக்கைகள் தயார் செய்ய முடியாத காரணத்தினால் மேற்படி வாகனத்துடன் 500 மீட்டர் தொலைவில் உள்ள புதுக்கோட்டை லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு வந்து சோதனை மேற்கொள்ளப்பட்டது.

சோதனையின் போது டாஸ்மாக் மேலாளர் திரு.மதிசெல்வன் மடியில் வைத்திருந்த பிரவுன் கலர் ஸ்கை பேக் என்று எழுதப்பட்ட ஷோல்டர் பேக்கை சோதனை செய்ய அதில் வெள்ளை நிற பாலித்தீன் பையில் பண கட்டுகள் இருந்தன. மேலும் ஐந்து கவர்களில் பணம் இருந்தன. அதில் வெள்ளை நிற பாலித்தீன் பையில் உள்ள பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் இரண்டாயிரம் நோட்டுகள் 38 (38X2000=76,000)ம், ஐந்நூறு ரூபாய் நோட்டுகள் 528 (528X500=2,64,000) இருந்தன. மேலும் காக்கி கலரில் இருந்த ஒரு கவரில் இரண்டாயிரம் நோட்டுகள் 117 (117X2000=2,34,000)ம், ஐந்நூறு ரூபாய் நோட்டுகள் 42 (42X500=21,000) இருந்தன. அந்த கவரின் மேல் 6698- விராலிமலை ரூ.5000, 6675- விராலிமலை ரூ.5000, 6669- பரம்பூர் ரூ.7000, 6639-பூதகுடி ரூ.3000, 6740 - தேராவூர் ரூ.3000 மொத்தம் 23,000 என்று ஊதா நிற மையினால் குறிப்பு எழுதப்பட்டுள்ளது. மேலும் மற்றொரு காக்கி கலர் கவரில் இரண்டாயிரம் நோட்டுகள் 5 (5X2000=10,000) இருந்தன. மற்றொரு காக்கி கலர் கவரில் இரண்டாயிரம் நோட்டுகள் 5 (5X2000=10,000)ம் இருந்தன. மற்றொரு லைட் மெரூன் கலர் ஆபிஸ் கவரில் இரண்டாயிரம் நோட்டுகள் 17 (17X2000=34,000)ம் ஐந்நூறு ரூபாய் நோட்டுகள் 5

(5X500=2,500) இருந்தன. மற்றொரு வெள்ளை நிற கவரில் இரண்டாயிரம் நோட்டுகள் 12 (12X2000=24,000)ம், ஐந்நூறு ரூபாய் நோட்டுகள் 2 (2X500=1,000)ம் ஆக மொத்தம் ரூ.6,76,500/- இருந்தன. மேலும் மேற்படி பேக்கின் உள்ளே இருந்த வெள்ளைத்தாளை எடுத்து பார்க்க அதில் 1 முதல் 25 வரை எண்களுக்கு நேராக ஊர் பெயர்கள் மற்றும் தொகைகள் மற்றும் செலவு விபரம் எழுதப்பட்ட குறிப்புகள் இருந்தது. மற்றொரு பாதி அளவு கொண்ட வெள்ளைத்தாளில் 11வது மாதம் என்று எழுதி 1 முதல் 6 வரை உள்ள எண்களுக்கு நேராக ஊர் பெயர்கள் மற்றும் தொகை எழுதப்பட்டுள்ளது. மற்றொரு அரைத்தாளில் 1 முதல் 18 வரை உள்ள எண்களுக்கு நேராக ஊர் பெயர்கள் மற்றும் தொகை எழுதப்பட்டுள்ளது. மேலும் மற்றொரு துண்டு சீட்டில் வடகாடு -20, திருவரங்குளம்-20, கீரமங்கலம்-50 பட்டுக்கோட்டை -150, குடோன் -15 மொத்தம் 255 என்று குறிப்பு எழுதப்பட்டிருந்தது. மேலும் முதுநிலை மண்டல அலுவலக முத்திரையிடப்பட்ட மேற்படி டாஸ்மாக் மேலாளருக்கு எதிராக டாஸ்மாக் பணியாளர்கள் முதுநிலை மண்டல மேலாளருக்கு அனுப்பி வைத்த கணினியில் டைப் செய்யப்பட்ட 21.09.2017ஆம் தேதியிட்ட கவருடன் இணைக்கப்பட்ட புகார் மனு இருந்தன. மேற்படி தொகைக்கான விளக்கம் கேட்க அவர் எந்தவிதமான பதிலும் கூறாமல் மவுனமாக இருந்தார். எனவே மேற்படி பணம் ரூ.6,76,500/-ம் மற்றும் பணம் இருந்த கவர்கள், பாலித்தீன் கவர் மற்றும் குறிப்பு எழுதப்பட்ட மேற்கண்ட வெள்ளை நிற தாள்கள் மற்றும் புகார் மனு ஆகியவற்றிற்கு முறையே 1, 2, 3, 4, 5 எண் கொடுத்து கைப்பற்றப்பட்டது. மேலும் பணம் வைத்திருந்த மேற்படி ப்ரவுன் கலர் ஸ்கை என்று எழுதப்பட்ட பேக்கும் கைப்பற்றப்பட்டது. மேற்படி பேப்பர் மற்றும் துண்டு சீட்டில் எழுதப்பட்டுள்ள குறிப்புகள் பற்றி மேலாளரிடம் கேட்க அவை வசூல் செய்த விபரத்திற்கான குறிப்புகள் என்றும், மேற்படி குறிப்புகள் சூப்பர்வைசர் முருகேசனால் எழுதப்பட்டது என்றும், அவர்தான் என் உத்தரவு படி டாஸ்மாக் கடைகளில் மாதமாதம் வசூல் செய்து கொண்டு வந்து கொடுப்பார் என்றும், அதற்கான விபரம் மேற்படி குறிப்பில் எழுதி என்னிடம் கொடுப்பார் என்றும் தெரிவித்தார்.

மேற்படி வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் திரு.மாரிசாமி த/பெ சிவசாமி, சிதம்பராபுரம், திருவேங்கடம் தாலுகா, திருநெல்வேலி மாவட்டம் என்பவர் அணிந்திருந்த கருப்பு நிற பேண்ட் பாக்கெட்டில் இருந்து ஆஜர் செய்த பண நோட்டுக்களை எண்ணிப்பார்க்க அதில் இரண்டாயிரம் நோட்டுகள் 6 இருந்தன. (6X2000=12,000) மற்றும் ஐந்நூறு ரூபாய் நோட்டுகள் 13 (13X500=6500), மற்றும் நூறு ரூபாய் நோட்டு ஒன்று (1X100=100)ம் மொத்தம் ரூ.18,600/- இருந்தன. அப்பணத்தை பற்றி அவரிடம் விளக்கம் கேட்க மேற்படி தொகையில் ரூ.10,000/- அவரது மாத ஊதியம் என்றும்,

மேற்படி ஊதியத்தை இன்று தான் (12.01.2018) டாஸ்மாக் மேலாளர் கொடுத்தாகவும் கூறினார். அதனை டாஸ்மாக் மேலாளரும் உறுதி செய்தார். மேலும் திருவேங்கட வட்டம் சிதம்பராபுரம் அருள்மிகு ஸ்ரீ சந்தனமாரியம்மன், ஸ்ரீ காளியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக நன்கொடை வசூல் ரசீது மூலம் 31.12.2017, 05.01.2018, 07.01.2018 மற்றும் 12.01.2018 ஆகிய தேதிகளில் நன்கொடை வசூல் செய்த தொகை ரூ.8,500/– என்று கூறி அதற்கான ரசீதின் அடிக்கட்டையை ஆஜர் செய்தார். மேலும் கை செலவுக்கு வைத்திருந்த தொகை ரூ.100/– என்று கூறினார். மேற்படி தொகைக்கான விளக்கம் சரியாக இருந்ததால் மேற்படி தொகை மற்றும் ரசீது புத்தகத்தை அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட டி.என்.67 எ.எம் 5407 டாடா இண்டிகா என்ற சில்வர் கலர் காரைப்பற்றி மேலாளரிடம் விசாரிக்க மேற்படி வாகனத்தை டாஸ்மாக் நிறுவனத்தில் ஒப்பந்த முறையில் பயன்படுத்தி வருவதாகவும், அதற்காக மேற்படி வாகனத்திற்கு வாடகையாக டாஸ்மாக் நிறுவனம் மூலம் மாதம் ரூ.15,000/– கொடுத்து வருவதாகவும் அதற்காக எழுத்து மூலமாக எந்தவித உடன்படிக்கையும் எழுதப்படவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் மேற்படி வாகனத்தின் பதிவு சான்று நகலை வாங்கி பார்க்க மேற்படி வாகனத்தின் உரிமையாளர் எஸ்.சிவசந்திரன், த/பெ சங்கரன், 1460/16 சி, திருவூடையான் சாலை 2வது தெரு, சங்கரன்கோவில், திருநெல்வேலி மாவட்டம் என்று இருந்தது. மேற்படி வாகனத்தை பதிவு சான்று நகல் மற்றும் இன்சூரன்ஸ் நகலையும் கைப்பற்றப்பட்டது.

சூப்பர்வைசர் திரு.முருகேசன் என்பவர் அவர் அணிந்திருந்த ஊதா நிற அரைக்கை சட்டையில் இடது புற பாக்கெட்டிலிருந்த இரண்டாயிரம் நோட்டுகளை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பார்க்க இரண்டாயிரம் நோட்டுகள் 22 இருந்தன. (22X2000=44,000) மற்றும் ஐந்நூறு ரூபாய் நோட்டுகள் 8 இருந்தன. (8X500=4,000) ஆக மொத்தம் ரூ.48,000/– இருந்தன. மேற்படி தொகைக்கான விளக்கம் கேட்க அவர் சரியான விளக்கம் கூறாததால் மேற்படி பணம் ரூ.48,000/– கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி குறிப்பு எழுதியது பற்றி விசாரிக்க அதற்கு அவர் வசூல் செய்த விபரத்திற்கான குறிப்பு தான் எழுதி டாஸ்மாக் மேலாளரிடம் கொடுத்ததாக தெரிவித்தார். மேலும் இன்று (12.01.2018) பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி டாஸ்மாக் கடைகளில் முதுநிலை மேலாளர் திருச்சி அவர்களின் உத்தரவுப்படி ஆய்வு செய்த போது அதிக விலைக்கு மேற்படி கடையில் விற்றது கண்டுபிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அறிக்கை அனுப்புவதாக டாஸ்மாக் மேலாளர் கூறியதன் பேரில் மேற்படி கடையில் பணிபுரியும் பணியாளர்கள் இன்று (12.01.2018) இது சம்மந்தமாக மேலாளரை சந்தித்து பேசி அவர் கூறியதன் பேரில்

நடவடிக்கைகளிலிருந்து தப்பிக்க பட்டுக்கோட்டை சேல்ஸ்மேன்கள் சுரேஷ், முருகேசன் மற்றும் பேராவூரணி சேல்ஸ்மேன் சுப்பிரமணியன் ஆகியோர் ரூ.1,50,000/– தன்னிடம் மேலாளர் கொடுக்கச் சொன்னதாக கூறி என்னிடம் ஒப்படைத்தார்கள். அந்த பணத்தை நான் பெற்று மேலாளரிடம் கொடுத்து விட்டேன். மேலும் அதன் விபரம் மேற்படி துண்டு சீட்டில் பட்டுக்கோட்டை–150 என்று எழுதியுள்ளதாக தெரிவித்து சாட்சிகளின் முன்னிலையில் அவர் தானாக முன் வந்து வாக்குமூலம் எழுதி கொடுத்தார். அந்த வாக்குமூலம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மற்றொரு சூப்பர்வைசர் திரு.மணிவண்ணன் என்பவர் அவர் அணிந்திருந்த வெளிர் மஞ்சள் நிற அரைக்கை சட்டையில் இடது புற பாக்கெட்டிலிருந்த பண நோட்டுகளை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பார்க்க அதில் இரண்டாயிரம் நோட்டுகள் 55 (55X2000=1,10,000)ம், ஐந்நூறு ரூபாய் நோட்டுகள் 4 (4X500=2,000) மொத்தம் ரூ.1,12,000/– இருந்தன. மேற்கண்ட பணத்தை பற்றி அவரிடம் விளக்கம் கேட்க முதலில் டி.ஆரிடம் பைனான்ஸ் வாங்கியதாக தெரிவித்தார். அதனை உறுதி செய்ய தொலைபேசி எண் கேட்ட போது தனது தந்தையிடமும் மற்றும் பேருந்துநிலைய டாஸ்மாக் கடை சேல்ஸ்மேனிடம் வாங்கியதாக தெரிவித்தார். மேற்படி சேல்ஸ்மேனிடம் தொலைபேசி மூலம் இதை பற்றி கேட்க அவர் மறுத்து கூறினார். அதனால் மேற்படி விளக்கம் முன்னுக்கு பின் முரணாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.1,12,000/–ம் கைப்பற்றப்பட்டது.

இச்சோதனையில் முடிவில் மேற்கண்ட நபர்கள் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள டாஸ்மாக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்களிடம் மாமூல் வசூல் செய்து வைத்திருந்த பணம் என்று தெரிய வந்ததின் பேரில் மேற்படி பணம் ரூ.8,36,500/–ம் கைப்பற்றப்பட்டது. எனவே மேற்படி நபர்களின் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் (உ.முருகேசன், தனி வட்டாட்சியர், அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன், புதுக்கோட்டை மாவட்டம்)

Sir, Received the complaint on 12.01.2018 at 22.30 hrs and registered the case in Pudukkottai V&AC Cr.No.01/2018 u/s 13(2) r/w 13(1) (d) of Prevention of Corruption Act-1988. 12/1/18

இதன் அசல் முதல் தகவல் அறிக்கையையும், புகார் மனுவையும் மற்றும் திடீர் ஆய்வு அறிக்கை மற்றும் திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் புதுக்கோட்டை தலைமை குற்றவியல் நீதிமன்றத்திற்கும், நகல்களை சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பிற்கும் வைக்கப்பட்டது.

12/1/18